# DEPOSITION OF WITNESS

( In the Court of the Principal District Munsif, Sankarankovil )

## E.A. No.8/2013 in E.P.No.20/2012

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | : சின்னத்துரை |
| Father's Name | : முடிபொருந்தாத்தேவர் |
| Village | : ஆயாள்பட்டி |
| Taluk | : சங்கரன்கோவில் |
| Caste | : -- |
| Calling | : கூலி |
| Religion | : இந்து |
| Age | : 36 |
| Date | : 16.07.2019 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 16th July 2019.

**முதல் விசாரணை :**

நான் மனுவின் மனுதாரர். நான் இன்று இந்த மனுவில் சத்தியப்பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக் கொள்ள பிரார்த்திக்கிறேன். லெட்சுமி என்பவர் அழகையா என்பவருக்கு எழுதிக்கொடுத்த அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ.1. மேற்படி அழகையா சுரேஷ் என்பவருக்கு எழுதிக்கொடுத்த அதிகார பாத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ.2. பின்னர் 05.10.2010 தேதியில் அழகையா சுரேஷ் என்பவருக்கு எழுதிக்கொடுத்த

அதிகார பத்திரத்தை ரத்து செய்துவிட்டார். அந்த ரத்து ஆவணத்தின் சார்பதிவக நகல் தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ.3. அழகையா தகவலின் பெயரில் அவரது வழக்கறிஞர் சுரேஷ் என்பவருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ.4. நான் மனு சொத்தை 07.10.2010 தேதியில் கிரையம் பெற்றேன். அந்த அசல் கிரைய ஆவணம் தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ.5.

**முதல் விசாரணை தொடர்ச்சி மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.**